1971 ஜூன் 30]

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that because of the threat of nationalisation of plantations, many of the plantation owners are not arranging for replantation of either tea or coffee and consequently the plantations are suffering?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : கேள்வி டெங்கனிக்கோட்டா பற்றி இருந்தாலும், அமைச்சர் பல இடங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சேர்வராயன் மலையில் தனியார் காபித் தோட்டம் போட்டிருக்கிறார்கள். அரசு தனியாகத் திட்டம் போட்டு, காபித் தோட்டம் நடத்த ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிச் சொல்லக் கூடிய திட்டமானது, ஒரு கார்ப்பொரேஷன் மூலமாகவோ அல்லது போர்டு மூலமாகவோ நிர்வாகத்திற்கு எடுக்கலாம் என்பது பரிசீலனையில் அரசாங்கத்தில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பின்னால், எந்த எந்த இடங்களில் காபி வளர்க்கும் திட்டத்தை அரசாங்கத்தின் மூலம் செய்யலாம் என்று ஆலோசிக்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is there any proposal to bring about a ceiling for the plantation areas in Tamil Nadu?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசு முடிவு எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

கான்சாபுரம் கிராமப் புல்வெளிக்காடு

* 95 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், கான்சாபுரம் கிராமத்திலுள்ள புல்வெளிக்காடு என்ற நிலப்பகுதி எப்போது வனத்துறையுடன் இணைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் கான்சாபுரம் கிராமத்திலுள்ள "புல்வெளிக்காடு" என்ற நிலப்பகுதி 1899-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ம் நாளில் வனத்துறையுடன் ஒதுக்கக்காடாக இணைக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை நிலமில்லாத விவசாயிகள் பயிரிட்டு வந்தார்கள். அவை காடுகள் என்று சொல்லி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களைப் பகிர்ந்து அளிக்கும் போது அப்படிப் பட்ட விவசாயிகளுக்கு முதலிடம் தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பெயர்தான் புல்வெளிக் காடு, ஆனால் அங்கே அடர்த்தியான மரங்கள் இருக்கின்றன. யானைக் கூட்டங்களும் இருக்கின்றன. விவசாயம் செய்ததாக என்னிடத்தில் விவரம் இல்லை. அப்படி விவசாயம் செய்தாலும், யானைக் கூட்டத்தால் அழிக்கப் பட்டுவிடும். நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கான்சாபுரத்தை ஒட்டியிருக்கும் இந்தக் காடு அமைச்சர் சொல்வதுபோல் யானைகள் நிறைந்த இடமில்லை. பல ஆண்டுக்காலமாக விவசாயம் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயம் செய்கிறவர்களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்படும் என்று சமீபத்தில் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 50,000 ஏக்கர் கொடுப்பதாக இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் புல்வெளிக்காடு பற்றி பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படிப்பட்ட காடுகளை யெல்லாம் பிறவகையில் உபயோகித்துவிட்டால், ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாமல் போவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவைகளால் மகஜர் கொடுக்க முடியாது என்பதால் கவனிக்காமல் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அம்மையார் அவர்களுடைய கவனத்திற்கு நன்றி.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இடங்களை மக்களுக்கு விவசாய இடங்களாகவும், வீடுகட்ட இடங்களாகவும் கொடுத்துவிடுவதால், காட்டு வளம் அழிந்து, நமக்கு வரவேண்டும் என்கிற மழை வராததால், முன்பிருந்த அரசாங்கம் செய்ததுபோல், வனமகோற்சவம் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விவசாயத்திற்குப் பயன் படக்கூடிய நிலங்களைப் பிரித்துக் கொடுத்தாலும், மலைப் பகுதிகளில் நிலங்களை மீண்டும் அடர்த்தியான காடுகளாக வளர்க்கத் திட்டம் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், காட்டிலாகாவின் கணக்கில் இருக்கின்ற எல்லா நிலங்களும் காட்டுப் பகுதி இல்லை என்றும், காட்டுப் பகுதியான இடத்தில் காடுவளர்க்காமல் இருப்பதையும், விவசாயத்திற்கு லாயக்கான இடத்தை பாரஸ்டில் சேர்க்கப் பட்டிருப்பதையும் ஆராய்ந்து, காட்டு வளத்தை அபிவிருத்தி செய்யும் தகுதி உள்ள நிலங்கள், விவசாயத்திற்குத் தகுதி உள்ள நிலங்கள் என்று ஒரு சர்வே செய்து வரையறுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1971 ஜூன் 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிப்பட்ட ஆலோசனையின்பேரில்தான், 50,000 ஏக்கர் கொடுக்கக்கூடிய முடிவு எடுத்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் வழங்கப்படவிருக்கும் காட்டுப் பகுதி எது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிக் கேள்வி தேவை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் புல்வெளிப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்தவர்கள் காட்டிலாகாவால் வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறைத் தண்டனையும் அனுபவித்திருக்கிறார்கள். அங்கே விவசாயம் செய்கிறவர்கள் வீடுகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அவர்களுக்கு நிரந்தரம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் ஏற்கனவே சொன்னது போல், புல்வெளிக்காடு என்பது மரங்கள் அடர்ந்த காட்டுப் பிரதேசம். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வேறு எதையோ புல்வெளிக்காடு என்று நினைத்துச் சொல்கிறார் போலும். நான் சொல்லுமிடத்தில் விவசாயம் செய்யவில்லை என்றும், அடர்த்தியான மரங்கள் இருக்கின்றன என்றும் என்னிடம் குறிப்பு இருக்கிறது. வேறு நிலத்தை கருத்தில் கொண்டு சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். விவரம் எழுதினால், அதைப் பற்றிப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி நிர்வாகத்தினர் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுப்பதும் தொழிலாளர் நேரடி நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதும் குறித்து.

MR. SPEAKER : **Under** Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice of the following adjournment motion, namely :—

> " Serious situation arising out of the continued refusal of the management of the Standard Motor Company to take back more than 1,000 workers and the consequent threat to go on direct action from 1st July 1971."